# சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம் முதல்வருக்கு தஞ்சாவூர் மாவட்ட மக்கள் நன்றி

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறையென்று வைக்கப் படும்”**

-என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் தமிழக அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கொரோனா 3-ஆம் அலை பல்வேறு நாடுகளில் பரவி பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தற்போது பல்வேறு வகையான கொரோனா வைரஸ்கள் கண்டறியப்பட்டு அவை வீரியம் மிக்கதாகவும், எளிதில் பரவி மிகுந்த பாதிப்பை உண்டாக்கும் என்பதையும் ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்து வருகிறோம். மேலும் அவை பெரிய அளவில் பாதிப்பை உண்டாக்கக் கூடியவை என்றும் மருத்துவ வல்லுனர்கள் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வருகின்றனர். நாட்டில் கொரோனா இரண்டாவது அலை கட்டுக்குள் இருந்தாலும் இன்னும் முழுமையாக அழிக்கப்படவில்லை. தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளாவில் தொற்று பாதிப்பு இன்னும் குறையவில்லை என்பதால் நமது மாநிலத்தில் தடுப்பூசி போடும் நடைமுறை மும்முரமாக தொடர்கிறது. இந்நிலையில் மூன்றாம் நிலை குறித்த அச்சமும் உள்ளதால் தமிழக அரசு கொரோனா அதிகமாகாமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தடுப்பூசி போடும் பணியை தீவிரப்படுத்திட அனைத்து மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.5.2021) சென்னை, டான் பாஸ்கோ பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு கொரோனாவில் இருந்து தமிழகத்தை மீட்டெடுக்க விரைவான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இதன் காரணமாக பூரண பாதிப்பிலிருந்து தமிழகம் மீண்டு வருகிறது. கடந்த மே மாதம் கொரோனா நோயாளிகளுக்கான ஆக்சிஜன் தேவை அதிகரித்த போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளி மாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்து விமானங்கள் மற்றும் விரைவு ரயில்கள் மூலமாக ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆக்சிஜன் பெற்றதன் காரணமாக பெரிய அளவிலான பாதிப்பிலிருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டனர். கொரோனாவால் தாய் தந்தையை இழந்து ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகள் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில் அந்த குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சம் வைப்புத்தொகை மற்றும் உறவினர் அல்லது பாதுகாவலரின் ஆதரவில் வளர குழந்தைகளின் பராமரிப்பு செலவுத் தொகையாக மாதம் ரூ.3,000

உதவித்தொகை அரசு இல்லங்கள் மற்றும் விடுதிகளில் தங்குவதற்கு இடம், பட்டப்படிப்பு வரை விடுதி கட்டணம் உட்பட கல்வி கட்டணம் அனைத்தையும் அரசே ஏற்கும், கொரோனா தொற்றால் உயிரிழந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத் துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை 10 இலட்சம் ரூபாயாக உயர்வு, கொரோனா சிகிச்சை பணியில் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் கொரோனா இழப்பீடுத் தொகை மற்றும் கொரோனா நோய்த்தொற்றால் காவல்துறையில் உயிரிழந்த காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்குத் தலா 25 இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத்தொகை என்பன உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தடுப்பூசி திட்டத்தை ஒரு இயக்கமாக செயல்படுத்தி வருகிறார்கள். சுகாதாரத்துறை தடுப்பூசி திட்டத்தை இயக்கமாக செயல்படுவதைவிட ஒரு வேள்வி போல நடத்த வேண்டும். தடுப்பூசி திட்டத்தில் எந்த மாவட்டமும் பின்தங்கி விடக்கூடாது தடுப்பூசியை போடுவதில் தமிழகம் தன்னிறைவு பெற்றுவிட வேண்டும். இந்தியாவுக்கு தமிழகம்தான் முன்மாதிரியாக இருக்கிறது என்று பெயர் எடுக்கும் வகையில் அனைத்து மாவட்ட நிர்வாகமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

**கொரோனா தடுப்பூசி மாபெரும் சிறப்பு முகாம் பணிகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:-**



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறுவதை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (26.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாண்புமிகு அரசு தலைமை கொறடா முனைவர்.கோவி செழியன் அவர்கள், மாண்புமிகு மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.ராமலிங்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துதுறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் அவர்கள் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




தஞ்சாவூர் மாநகராட்சி பழைய வீட்டு வசதிவாரிய குடியிருப்பு பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறுவதை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (26.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாண்புமிகு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துதுறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.துரை.சந்திரசேகரன் அவர்கள் (திருவையாறு), திரு.டி.கே.ஜி.நீலமேகம் அவர்கள் (தஞ்சாவூர்), திரு.க.அண்ணாதுரை அவர்கள் (பட்டுக்கோட்டை), மற்றும் பலர் உடன் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கத்தில் தடுப்பூசி போடும் பணிகளை விரைவுபடுத்த மாவட்டந்தோறும் பொதுமக்களிடையே தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி மாபெரும் சிறப்பு முகாம்கள் நடத்திடவும் அறிவுறுத்தினார்கள். அதன் அடிப்படையில் நமது மாவட்டத்தில் 12.09.2021 அன்று நடைபெற்ற முதலாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 1,05,530 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தத் திட்டமிடப்பட்டு 1,16,902 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது முதல் தவணை தடுப்பூசி 91,402 நபர்களுக்கும், இரண்டாம் தவணை தடுப்பூசி 25,500 நபர்களுக்கும் செலுத்தப்பட்டது. இம்முகாமில் 2036 முகாம்கள் அமைக்கப்பட்டு 8144 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேபோன்று 19.09.2021 அன்று நடைபெற்ற இரண்டாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 40,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தத் திட்டமிடப்பட்டு 47,744 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதில் 709 முகாம்கள் அமைக்கப்பட்டு 2836 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதேபோன்று 26.09.2021 அன்று நடைபெற்ற மூன்றாவது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 98,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தத் திட்டமிடப்பட்டு 1,04,011 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதில் 745 முகாம்கள் அமைக்கப்பட்டு 2980 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இம்முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று முகாம் நடைபெறும் இடங்களில் ஆய்வு செய்து பின்னர் 100௱ கொரோனா தடுப்பு ஊசி செலுத்தி சாதனை படைத்த 21 ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

**சிறப்பு தடுப்பூசி முகாம் மூலம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட தஞ்சாவூர் பல்லவன் சாலை சேர்ந்த திருமதி. அனுசியா கோவிந்தராஜன் அவர்கள் கூறுகையில்,**



திருமதி.அனுசியா
சாரதா நகர்
தஞ்சாவூர்

நான் பல்லவன் சாலையில் உள்ள சாரதா நகரில் வசித்து வருகிறேன். தடுப்பூசி போட்டுக்கொள்ள பயந்துக்கிட்டு இதுவரை தடுப்பூசி போடாமல் இருந்தேன். அப்புறம் வீட்டில் உள்ளூர் தொலைக்காட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொரானா தடுப்பூசி குறித்து சிறப்பு முகாம் நடைபெறுவதாகவும், தடுப்பூசி போடலைன்னா என்ன பாதிப்புகள் வரும் என்பது பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். பிறகு அதிகாரிங்க வீட்டுக்கு வந்து தடுப்பூசி போட்டுக்கங்க அதனால எந்த பிரச்சினை வராதுன்னு சொல்லிட்டு போனாங்க. அப்புறம் எங்க தெருவுல கொரோனா தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது அதையும் பார்த்த பிறகுதான் எனக்கு தடுப்பூசி பத்தின பயம் நீங்கி தடுப்பூசி போட்டுக்க ஆர்வம் வந்துச்சு. அப்புறம் நானும் என் பேத்தியும் சேர்ந்து பக்கத்தில் நடந்த முகாமில் தடுப்பூசி போட்டுட்டு வந்தோம் இப்ப நான் நல்லா இருக்கேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி.க.பிரேமலதா,**
**செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**